# History of India from 1206 to 1707 A.D.

# Unit – V

-

## Contents

1. Art and Architecture under the Mughals ........................................ 2

2. Downfall of the Mughals ........................................ 5

3. Marathas ........................................ 8

4. Rise of the Sikhs – Guru Nanak – Khalsa ........................................ 19

# 1. Art and Architecture under the Mughals

**மொகலாயர் கால கலை மற்றும் கட்டிடக் கலை கட்டடக்கலை**

வரலாற்றாசிரியர்கள் கட்டடக் கலை பற்றிப் பல்வேறு கருத்துக்களைக் கூறுகின்றனர். பெர்கூலன் என்பார் மொகலாயர் காலக் கட்டடக் கலை அந்நிய நாட்டுக் கலைத் திறனைக் கொண்டுள்ளனதென்றும், ஹாவன் என்பர் இந்தியர்கள் இயல்பாகவே கலை நுணுக்கங்கள் அறிந்தவர்கள். அந்நியர்களின் வருகையால் அவர்களது பாதிப்பு ஓரளவிற்கு ஒத்திருக்கலாம் என்றும் கருத்துத் தெரிவிக்கின்றனர். மொகலாயர் காலக் கட்டடக் கலை மெசடோனியக் கலையிலிருந்த வளர்ச்சி கூடாரங்களின் பாதிப்பு எனச் சிலர் கருதுகிறார்கள். பின்னர் அது பாக்தாத்திற்கும், இந்தியாவிற்கும் பரவியிருக்கலாம் எனவும் கருத்து நிலவுகிறது. அக்பர் காலக் கட்டடக் கலை வரையிலும் பாரசீகக் கலை படிந்திருப்பதைக் காணலாம். ஆதன் பிறகே இந்தியக் கலைத் திறனைத் காண முடிகிறது. மோகலாயர் காலக் கட்டடங்கள் அலங்கார மணிகளாலும், கண்ணைக் கவரும் வண்ணங்களாலும் மிளிர்கின்றன.

அரண்மனை மண்டபங்களும் அரைவட்ட வடிவக் கவிகை மாம அமைப்புடைய நுழைவாயில்களும், தூண்களால் தாங்கப்பட்ட அரண்மனை மண்டபங்களும் மூலைச் சிறு கோபுரங்களும் கவிகை மோடுகளும், உயர்ந்த அடுக்கு மாடிகளும், கவிகை மாடமும் மொகலாயர் காலக் கட்டடக் கலையில் காணலாம். இந்தியக் கரையும், இஸ்லாமியக் கலையும் கலக்க இரு காரணங்கள் கூறுகின்றனர். மொகலாயப் பேரரசர்கள் கட்டடங்களைக் கட்ட இந்தியச் சிற்பிகளையும், கலைஞர்களையும் பணித்ததால் அவர்களிடமிருந்த கட்டடக் கலை நுணுக்கங்களைக் கொண்டே அமைத்தனர் என்பது முதல் காரணம். இந்து, சமணக் கோவில்களை இடித்து அந்த இடத்திலேயே அரண்மனைகளும், மசூதிகளும் எழுந்ததால் இடிபாட்டுப் பொருட்களைக் கொண்டே புதிய கட்டடங்கள் கட்டப்பட்டதால் பழைய உருவம் அதில் பிரதிபலித்தது ஜூம்மா மஸ்ஜித்தும் ஆக்ராவிலுள்ள லோதிக் கோட்டையும் பாபர் காலக் கட்டக் கலைக்குரிய சான்றுகளாகும்.

**ஹுமாயூன்**

இவர் அரசியல் தொல்லைக் காரணமாகக் கட்டடக் கலையில் கவனம் செலுத்திட இயலவில்லை. பீஹாரில் ஷெர்ஷாவால் கட்டப்பட்ட மசூதி ஒன்றுள்ளது. இது இந்து முஸ்லீம் கட்டடக் கலையின் இணைப்பாகும். பதேபாத்தில் பள்ளிவாசல் ஒன்றும் உள்ளது.

**அக்பர்**

இவரது காலத்தில் கட்டடக் கலையில் முன்னேற்றம் கண்டபோதும் இந்தியப் பண்பாட்டைப் போற்றிய போதும், இவரது காலக் கட்டடக் கலையிலும் பாரசீக கலையின் சாயல் படிவதைத் தடுக்க இயலவில்லை. ஆக்ராவிலுள்ள ஜஹாங்கீரி மகாலும் பழைய டில்லியிலுள்ள ஹுமாயூன் சமாதியும் சான்றாகும். ஆக்பர் ஏராளமான கோட்டைகள், மசூதிகள், கோபுரங்கள், அரண்மனைகள், பள்ளிகள், தங்குமிடங்கள் , நுழைவாயில்கள் ஆகியவற்றைக் கட்டியுள்ளார். ஆக்ரா கோட்டையின் மதில் சுவர் 70 அடி உயரமும், கோட்டை ஒன்றரை மைல் சுற்றளவும் கொண்டுள்ளது.

எழில் கொஞ்சும் பதேபூர் சிக்ரியும், அங்குள்ள கட்டடங்களும் அக்பரின் கலையார்வத்திற்குச் சான்றாகும். ஜோதிபாயின் அரண்மனை, மரியம், சுல்தான் ஆகியோரின் அரண்மனைக்குள் பீர்பாலின் இல்லம், திவானி ஆம், திவானி காஸ், பாஞ்ச் மஹால், ஜும்மா மஸ்ஜித் புலந்தர்வாசா, சலீமின் கல்லறை ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும். சிகந்தராவில் உள்ள அக்பரின் கல்லறை பிறவற்றைவிட தனித்தன்மையுடன் விளங்குகிறது. புலந்தவர்வாசாவைப் போல உயரமான நுழைவாயிலை இந்தியாவில் எங்குமே காண முடியாது.

**ஜஹாங்கீர்**

அக்பரைப் போல் கட்டடக் கலையில் நாட்டம் கொள்ளவில்லை. ஜஹாங்கீரின் மனைவி நூர்ஜஹான் கட்டிய இதமத்துல்லா சமாதி சலவைக் கல்லாலும், உள் மடிப்புகளில் அழகிய பல வண்ணக் கற்களைப் பதித்துப் பூவேலைப்பாடுகளை அழகுற அமைத்திருப்பது குறிப்பிமத்தக்கதாகும்.

**ஷாஜஹான்**

கட்டடக் கலையின் இளவரசர் என்றழைக்கப்பட்ட ஷாஜஹான் காலத்தில் தான் கட்டடக் கலை உச்ச நிலையை அடைந்தது. ஆக்ரா, டெல்லி , ஆஜ்மீர் , அலகாபாத், காஷ்மீர், காண்டகார், காபூல் ஆகிய இடங்களில் கோட்டைகள், தோட்டங்கள், மாளிகைகள் ஆகியவற்றை ஒன்றாக விளங்கும் தாஜ்மஹால் சலவைக் கற்களால் ஆனது. யமுனை ஆற்றங்கரையில் 22 ஆண்டு காலம் ஏராளமான பொருட் செலவில் பல்லாயிரக்கணக்கோரைக் கொண்டு எழுப்பியதாகும்.

**இலக்கியம்**

பாபர் துசாக்கி பாபரி எனத் தன் வாழ்க்கை வரலாறு எழுதிச் சிறப்பு சேர்த்தார். தத்துவ ஞானிகளுடன் உமாயூன் உடனிருந்து இலக்கிய ஆர்வத்தை வெளிப்படுத்தினார். அக்பர் கால வரலாற்றுப் படைப்புகள், மொழிபெயர்ப்புகள், பாடல் என மூன்றாகப் பிரிக்கலாம். அக்பர் 24,000 கையெழுத்துப் படிகள் அடங்கிய நூல் நிலையத்தை நிறுவிப் பராமரித்து குறிப்பிடத்தக்கதாகும். முல்லாதாவூதின் தரீக்கி அலிபி , அபுல்பாசலின் அயினி அக்பரி அக்பர் நாமா , பதாவுனியின் முண்டாகப் உல் தவாரிக், நிர்சமுத்தீன் அகமது பகத் இ அக்பர், அபுல்பதேயின் இரஹீமி ஆகியவை வரலாற்றுப் படைப்புகளாகும். இராமாயணத்தைப் பாரசீக மொழியில் பாவுனி மொழி பெயர்த்தனர்.

இராஜதரங்கினி, அதர்வண வேதம், லீலாவதி ஆகிய வடமொழி நூல்களும் பாரசீக மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன. இந்தி மொழி இலக்கியமும் அக்பர் காலத்தில் வளர்ச்சியடைந்தன. அக்பரின் அமைச்சர் அப்துல் ரஹிம் இயற்றிய தோ ஹாஷ் எனும் அறிவியல் நூல் இன்றும் போற்றிப் பாதுகாக்கக் கூடிய நூலாகும். அக்பரின் நண்பர் ராஜ்பீர்பாலின் கவிதைகள் நகைச்சுவையுடன் கூடிய நூலாகும்.

ஜஹாங்கீர் பாரசீக மொழியில் தன் வாழ்க்கை வரலாற்றனைக் கவிதை நடையில் வடித்துள்ளார். ஷாஜஹான் காலத்தில் தோன்றிய வரலாற்று நூல்களுள் அப்துல் ஹமீது லாகூரி எழுதிய பாதுஷா நாமாவும், இனாயத்கான் எழுதிய ஷாஜஹான் நாமாவும் குறிப்பிடத்தக்கவை. அவருடைய மகன் தாராஷிகோ எழுத்துலகில் ஈடுபட்டவர். உபநிடதம், பகவர் கீதை, யோகசாத்திரம் முதலிய வடமொழி நூல்களைப் பாரசீகு மொழியில் மொழி பெயர்த்தார். காசீம்

எழுதிய ஆலம் கீரநாமாவும் மஸ்தாயித்கான் எழுதிய மாசீர் ஆலம் கீர் நூல்கள் ஔரங்கசீப்பின் காலப் படைப்புகளாகும்.

**கவிதைகள்**

கிஸாவி என்ற பாரசீக கவிஞர் மிராதி உல் கைனத் நாஸர் இ பாதித்த, இஸ்ரார் - இ - மக்த்ப போன்ற பாடல்களை இயற்றினார். அமீர்குஸ்ரு என்பவர் மஸ்நாவி நூல், ஒதாமன், சவாதி - உ-இல்கம் போன்ற சில கவிதை தொகுப்புகளை இயற்றினார். சூர்தாஸ் என்பவர் சூர்சாகர் , சூறாவளி, ராமதாஸர் என்பவர் ரஸிக்பிரியா , அலங்கிரித, மஞ்சரி ஆகிய இலக்கண கவிதைகளையும் எழுதினார். ராஜாபீர்பால் என்பவர் கவிராயர் என்ற பட்டடம் பெற்றார். அப்துல் ரஹிம் என்பவர் பன்மொழிக் கவிஞராக இருந்தார்.

**மொழிபெயர்ப்பு துறை**

அக்பர் தம்முடைய நேரடி மேற்பார்வையின் கீழ் ஒரு மொழி பெயர்ப்புத் துறையை நிறுவினார். இத்துறையின் மூலம் பல இந்து புராணங்கள் பாரசீக மொழிக்கு மொழி பெயர்க்கப்பட்டன. மகாபாரதம், இராமாயணம், அதர்வண வேதம், லீலாவதி, ராஜதரங்கிணி ஆகியவை பாரசீக மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது. இம்மொழி பெயர்ப்புக்கு அபுல்பாசல், பெய்சி, பதௌனி போன்றோர் உதவினர். டஜாக் என்ற வானவியல் நூலை முகமன்கான் என்பவரும் பஞ்ச தந்திரக் கதைகளை அபுல் பாசலும், மொழிபெயர்த்தனர்.

**ஓவியக்கலை**

மொகலாயர்கள் டெல்லிச் சுல்தாளியர் கலைக்கு உயிருட்டினர். சீன மங்கோலிய நுணுக்கங்களும் திபெத்தியன் வழியாக இந்திய வந்து இந்திய நுணுக்கங்களைக் கலந்து மொகலாயர் கலையாக மிளிர்ந்தது. அரசியல் அல்லல் காரணமாக கட்டடக் கலையில் கவனம் செலுத்தாத உமாயூன் பாரசீகத்திலிருந்த வண்ண ஓவியங்கள் கண்டுகளித்து இந்திய திரும்புகையில் சையத் அலி, குவாஜா அப்துல் சமத் எனும் இரு ஓவியர்களைத் தன்னுடன் அழைத்து வந்த ஓவியக் கலையைத் தன் காலத்தில் ஆரம்பித்து வைத்தார்.

ஓவியத்திற்குத் தனித்துறையை அக்பர் அமைத்ததோடு, இந்து முஸ்லீம் ஓவியர்களை ஊக்குவித்தார். குவாஜா சமது என்பவரைத் தலைவராக நியமித்ததுடன் சிறந்த ஓவியங்களுக்கப் பரிசளித்தார். பதேபூர் கோட்டையின் சுவர்களை ஓவியங்களால் அழகு செய்தார். ஜஹாங்கீர் காலம் ஓவியக்கலையின் பொற்காலம் எனலாம். மலர்கள், செடிகள், கொடிகள், பறவைகள், விலங்குகள் போன்றவற்றை ஓவியமாக வரைந்தனர். இந்திய ஓவியங்களை ஆதரிக்காதவராக இருந்த போதிலும் பிஸன்தாஸ், கேசவ மனோகர், வர்தங், துளசி ஆகிய இந்திய ஓவியர்களும் பெயர்பெற்றனர். பரூக் பெக் முகமது நதிர், முகமது முதலானவர்களை ஆதரித்தார். சர் தாமஸ்ரோ இவர்களின் திறமையை புகழ்ந்துள்ளார். கட்டடக் கலைக்கு ஆதரவளித்த ஷாஜஹான் ஓவியக் கலையை வளர்க்க முன் வரவில்லை.

**இசைக் கலை**

பாபர் இசைக் கலையைப் பற்றி ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்று எழுதினார். ஹீமாயூனும் பாபரைப் போன்று இசைக்கலைக்கு ஆதரவு கொடுத்தார். அவர் திங்கள் , புதன் ஆகிய நாட்களில் தன் ஓய்வு நேரத்தை இசைக்கஞைரோடு பகிர்ந்துக் கொண்டார். அக்பரும்

இசைக்கலை வளர்ச்சிக்கு பெரிதும் ஊக்கம் கொடுத்தார் அவர் இந்து இசைவாணர்களிடமிருந்து இதை நுணுக்கங்களை கற்றறிந்தார். ராம்தாஸ், பாவ்ரா, சூர்தாஸ், தான் சென் போன்றவர்கள் அக்பர் காலத்தில் வாழ்ந்த இசைக் கலைஞர்களாவர். தான் சென் தம் இசைப்புலமையால் யமுனை நதியின் ஓட்டத்தையே தடை செய்தார். என்று கூறுவர். ஜஹாங்கீர் காலத்தில் இசைக் கலை மேலும் வளர்ந்தது. அவருடைய அவையில் ஆறு புகழ்பெற்ற பாடகர்கள் இருந்தனர். என்று வில்லியம் பிரெஞ்ச் குறிப்பிட்டுள்ளார். ஜஹாங்கீர் இந்தி பாடல்கள் எழுதி இசையமைத்தார். மேலும் நடனக் கலைஞர்களும் இவர் அவையில் இருந்தனர். ஷாஜஹானின் காலத்திலும் இசைக்கலை வளர்ந்தது. ஜகந்நாதன் என்பவரின் பாடலின் இனிமையை பாராட்டி அவரது எடைக்கு எடை தங்கம் கொடுத்தாராம். ராம்தாஸ், மஹாபட்டர் போன்றோர் ஷாஜஹானின் அவைக்களத்திலிருந்த பிற பாடகர்களாவர்.

ஔரங்கசீப் காலத்தில் பிற கலைகளை போல் இசைக் கலையையும் சீரழிந்தது. இசைக்கலையை அழிக்க வேண்டும் என்பதற்காக ஒரு தனித்துறையை ஔரங்கசீப் நிறுவினார். புல இசைக் கலைஞர்கள் நாட்டை விட்டு வெளியேற்றினர். கலைஞர்கள் எங்கு கச்சேரி நடத்தினாலும் அங்கு சென்று இத்துறையினர் தங்கள் கைவரிசையைக் காட்டி இசைக்கருவிகளை உடைத்து எறிந்து விடுவர்

## 2. Downfall of the Mughals

### மொகலாயப் பேரரசின் வீழ்ச்சி

பேரரசுகள் தோன்றுவதும் மறைவதும் இயற்கை. இருப்பினும் நிலையான அரசு நீண்டகாலம் இருந்து பின்னர் திடீரென நிலைகுலைந்து வேரற்ற மரமாக வீழ என்ன காரணங்கள் என்பதை ஆராய்வது மிக அவசியம். பாபரால் தோற்றுவிக்கப்பட்டு பின்னர் அக்பர், ஜஹாங்கீர் , ஷாஜஹான் போன்றவரால் பெரிதும் பாதுகாக்கப்பட்டு வளமுடன் இருந்த அரசு வீழ்வதற்கு ஔரங்கசீப் எவ்வகையில் காரணமாகிறார் என்பதையும் ஆராய வேண்டும்.

### சர்வாதிகார ஆட்சிமுறை

- மொகலாயர் ஆட்சியில் மன்னர்கள் அதிக செல்வாக்கு பெற்றவர்களாக இருந்தனர். ஏல்லா அதிகாரங்களும் அவர்களிடமே இருந்தன. இத்தகைய அதிகாரம் பெற்றவர்கள் திறமை மிக்கவர்களாக இருந்தால் எந்தவித ஆபத்தும் இல்லை . அக்பர், ஜஹாங்கீர், ஷாஜஹான் ஔரங்கசீப் போன்றவர்கள் பின்பற்றி வந்த நிலைமை தலைகீழாக இருந்தது. ஔரங்கசீப்பை பின்பற்றி வந்த மன்னர்களில் எவரும் திறமையுடன் செயல்படவில்லை.
- முஸ்லீம் பிரபுக்கள் ஷாஜஹான் காலத்தில் மிகவும் உண்மையுடன் பேரரசின் வளர்ச்சிக்கு ஆதரவு தந்தனர். ஔரங்கசீப்பிற்கு பிறகு வந்த பிரபுக்கள் கருத்து வேறுபாடு, இன வேறுபாடு காரணமாக தனித்தனியே பிரிந்தனர். ஈராணி, தூராணி, இந்துஸ்தானி என பல பிரிவுகளுடன் சண்டையிட்டுக் கொண்டனர். ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுத்கதனர். அதனால் அவர்களின் பலவீனம் வெளிப்பட்டதோடு, மொகலாய பேரரசின் வலிமையும் நலியுற்றது.

- மொகலாயப் பேரரசு பரந்து விரிந்து கிடந்தது. அப்பரந்த பேரரசை ஒருவரே கட்டி ஆள்வது பெரும் சுமையாக இருந்தது. தக்காணம், வடகிழக்கு, வடமேற்கு இந்தியப் பகுதிகள் என்று அனைத்து பகுதிகளிலும் குழப்பம் நிலவிக் கொண்டிருந்தது. அதை அடக்க ஒருவரால் முடியாத நிலை ஏற்பட்டது. இது பேரரசு அழிவுக்கு ஒரு காரணமாக விளங்கியது.
- பேரரசின் படையில் இந்துக்கள், ஆப்கானியர், பாரசீகர். மத்திய ஆசியாவினர் என்று பல்வேறு பிரிவினர் இருந்தனர். இவர்கள் அவர்களின் இனத்தலைவருக்கு மட்டும் தான் கட்டுப்பட்டு நடந்தனர். சில சமயங்களில் எதிரிகளுக்கு காட்டிக் கொடுத்தனர். லஞ்சம் பெற்றனர். படையெடுப்பின் போது தீவிரம் காட்டாமல் இருந்தனர். மான்சப்தாரி முறையில் குறையிருந்தது.
- மான்சப்தாரி படைவீரர்களுக்கு கருவூலத்திலிருந்து அரசு நேரடியாக ஊதியம் கொடுக்கவில்லை . அதனால் படைவீரர்கள் மான்சப்தாரிகளை நம்பியே இருந்தனர். அரசு மான்சப்தாரி வீரர்களுக்கு நிலங்கள் மட்டும் கொடுத்தன. அந்நிலங்களை மான்சப்தாரிகள் தம் வாரிசுகளுக்கு சொந்த நிலங்களாக ஆக்கிக் கொண்டனர். இதனால் படைவீரர்கள் கட்டுப்பாடற்ற திறமை இல்லாதவர்களாக காணப்பட்டனர். அவர்களிடம் பயனற்ற பழைய கால ஆயுதங்கள் புழக்கத்தில் இருந்தது. அவர்கள் சோம்பேறிகளாக இருந்தனர். சுகவாழ்வில் விருப்பம் கொண்டவர்களாக காணப்பட்டனர்.
- மன்னர்கள் தாங்கள் பெற்ற சிறு வெற்றியை குறிப்பிடும் வகையில் பெரும் களியாட்டமே நடத்தினர். பெரும் பரிசுகளும் பட்டங்களும் கொடுத்தனர். இதற்கு ஹீமாயூனே சிறந்த எடுத்துக்காட்டு.
- மொகலாயர்கள் கடற்படைக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அதனால் ஏற்பட்ட தீமைகள் ஏராளம். ஐரோப்பியர்களான போர்த்துக்கீசியர்களும், ஆங்கிலேயர்களும் கடல் ஆதிக்கம் பெற்றிருந்தனர். இதனால் மாராட்டியர்கள் வலிமை பெற்று எதிர்த்த போதெல்லாம் மொகலாயர்கள் ஐரோப்பியர்களை சார்ந்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.
- ஒவ்வொரு மன்னரும் காலம் சென்றதும், அதற்கு அடுத்த மன்னன் யார்? என்ற கேள்விக்கு சரியான பதில் கிடைக்கவில்லை. ஆகவே ஒவ்வொரு மன்னின் இறுதிக் காலத்திலும் வாரிசு உரிமைப் போர் ஏற்பட்டது. அதனால் மக்களிடையே பிளவு ஏற்பட்டது. இப்பிளவு மொகலாய பேரரசின் வீழ்ச்சிக்கு வித்திட்டது எனக் கூறலாம்.
- மொகலாய மன்னர்களில் ஔரங்கசீப்பை தவிர மற்ற எல்லா மன்னர்களும் ஆடம்பர வாழ்க்கை நடத்தினர். ஷாஜஹான் அரசு பணத்தில் தாஜ்மஹாலை கட்டினார். அக்பர் அரசு பணத்தில் இபாதத்கானா என்ற வழிபாட்டு மண்டபம் அமைத்தார். இத்தகைய ஆடம்பரம் மக்களிடையே வெறுப்பை ஏற்படுத்தியது.
- அயல் நாட்டவரின் படையெடுப்பால் மொகலாய பேரரசு அடியோடு மண்ணாகியது. நாதிர்ஷா படையெடுத்து ஷாஜஹானது கோகினூர் வைரத்தால் செய்யப்பட்ட மயில் ஆசனத்தை அபகரித்தான். இது தற்போது பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் உள்ளது. அகமதுஷா அடிக்கடி படையெடுத்து மொகலாயர்கள் சேர்த்து வைத்த தங்க நகைகளையும், வைரங்களையும் கொள்ளையடித்து சென்றான். இதனால் மொகலாய பேரரசு அடியோடு சரிந்தது.

- ஐரோப்பியர்கள் வருகை மொகலாய பேரரசு அடியோடு அழிவதற்கு காரணமாயிற்று. ஐரோப்பியர்களிடமிருந்த நவீன போர் ஆயுதங்கள் மொகலாயர்களிடம் இல்லை.
- ஔரங்கசீப்பின் மதவெறி மொகலாய பேரரசின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக ரங்கசீக் முஸ்லீம் மதத்தின் சன்னி பிரிவை சார்ந்தவர். இந்துஸ்தானத்தில் வாழும் மக்களை சன்னி பிரிவில் சேர்க்க வேண்டுமென்று வெறி அவரிடம் காணப்பட்டது. பல இந்துக்களை கட்டாயப்படுத்தி மதமாற்றம் செய்தார். சன்னி பிரிவில் சேராத இந்துக்களை பல வழிகளிலும் துன்புறுத்தினார். இது இந்துக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியது.
- ஔரங்கசீப் இந்துக்கள் மீது யாத்திரிகர் வரியும், ஜிஸியா வரியும் திணித்தார். கங்கையாற்றில் புனித நீராட செல்லும் யாத்திரிகர்கள் 6 ¼ ரூபாய் வரி செலுத்தி குளிக்க வேண்டும். அதே போன்று இந்துக்களுக்கு சுங்கவரி 5 சதவீதம் விதிக்கப்பட்டது. ஆனால் முஸ்லீம்களுக்கு சுங்கவரி 2 ½ சதவீதம் மட்டும் விதிக்கப்பட்டது. இந்த ஏற்றத்தாழ்வை இந்துக்கள் எதிர்த்து மொகலாய பேரரசு வீழ்ச்சிக்கு ஒரு காரணமாக விளங்கியது.
- பல இந்து கோயில்கள் இடிக்கப்பட்டு, அதே இடத்தில் மசூதிகள் கட்டியது இந்துக்களுக்கு மேலும் வெறுப்பை ஏற்படுத்தியது.
- ஔரங்கசீப்பின் குணங்களே அனைவரையும், அவர் மீது வெறுப்பு ஏற்பட வைத்தது. சொந்த மகனையே அவர் நம்பவில்லை. அவர் போருக்கு தனது மகனை அனுப்பும் போது அவனுடன் இரண்டு பேர்களை அனுப்புவார். இதனால் தன் பிள்ளைகளின் வெறுப்பையும் ஏற்படுத்திக் கொண்டார்.
- சீக்கியர்களின் 9 - ம் குரு தேஜ்பகதூரை அழைத்து தேஜ்பகதூர் மறுக்கவே அவரை ஐந்து நாட்கள் சித்திரவதை செய்து கொலை செய்தார். தேஜ்பகதூரின் மகன் 10 - ம் குரு குரு கோவிந்தசிங் ஔரங்கசீப்பிற்கு எதிராக புனிதப் போர் தொடுக்குமாறு மக்களுக்கு கட்டளையிட்டார். சீக்கியர்களை ஔரங்கசீப் பகைத்துக் கொண்டது மொகலாய பேரரசு அழிவுக்கு வித்திட்டது எனலாம்.
- நீதி வழங்குவதில் இஸ்லாம் சமயத்தவர்களுக்கு தனி சலுகைகள் வழங்கப்பட்டன. ஆனால் இந்துக்கள், சீக்கியர்கள், இராஜபுத்திரர்கள், ஷியாபிரிவு முஸ்லீம்கள் இவர்களுக்கு அதிக தண்டனை வழங்கப்பட்டது. இது மற்ற இனமக்களின் வெறுப்பை ஏற்படுத்திக் கொண்டது.
- ஔரங்கசீப் காலத்தில் அவரை சூழ்ந்திருந்த நாடுகள் சிறப்பாக, திறமையாக, வீரத்துடன் ஆட்சிபுரிந்தனர். மராட்டிய பகுதிகளை ஆண்ட சிவாஜியும், ஜாட் இனத்தவர்களும், பண்டேலா இனத்தவர்களின் தீரமும், சீக்கியர்களின் எழுச்சியும், வடகிழக்கு எல்லை மாநிலத்தவர்களின் கிளர்ச்சியும், மொகலாய பேரரசை ஆட்டிப் படைத்தன.
- இந்துக்களுக்கு ஆட்சித் துறையில் வாய்ப்பு வழங்கப்படவில்லை. அதே சமயம் திறமையாக செயல்பட்டு வற்த இந்துக்களை ஆட்சி துறையிலிருந்து அகற்றினார். இது கற்றவர்களின் வெறுப்பை ஏற்படுத்திக் கொண்டது.
- ஔரங்கசீப்பின் தக்காண கொள்கை தான் மொகலாய பேரரசு அழிவாற்கு முக்கிய காரணமாக இருந்தது. தக்காணத்தை ஆண்ட பிஜப்பூர், கோல்கொண்டா சுல்தான்கள் முஸ்லீமின் ஷியாப்பிரிவை சார்ந்தவர்கள். இவர்கள் இருவரையும் சன்னிப்பிரிவில் சேர ஔரங்கசீப் கட்டாயப்படுத்தினார். சுல்தான்கள் மறுத்ததால் ஔரங்கசீப் தக்காணத்தின்

மீது படையெடுத்தார். இப்போரின் காரணமாக பொருளாதார சீரழிவு ஏற்பட்டது. பேரரசர் தரைநகரத்தில் இல்லாமல் தக்காண பகுதிக்கு சென்றதால் வட இந்தியாவில் பல இடங்களில் கிளர்ச்சிகள் தோன்றியது. அயோத்தி , வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா ஆகிய பகுதியில் தங்களை சுதந்திர நாட்டினர் என்று பிரகடனப்படுத்தினார். இது மொகலாய பேரரசு வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக விளங்கியது.

## 3. Marathas

தக்காணத்தில் பல பெரிய அரசுகள் தோன்றி மறைந்துள்ளன. அவற்றுள் பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய மராட்டிய அரசு மிகச் சிறந்ததொன்றாகும். இந்தியாவின் தென் பகுதியில் இஸ்லாமிய மதம், அதிகமாகப் பரவ விடாமல் தடுத்தவர்கள் மராட்டியர்கள். முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணமானவர்களும் இவர்களே. இவர்களின் சிறந்த தலைவராக விளங்கியவர் சிவாஜி ஆவார். மராட்டியர்களின் எழுச்சிக்கு சிவாஜிதான் காரணமாவார் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இந்த மராட்டியர்களின் எழுச்சி இந்திய வரலாற்றில் முக்கியத் திருப்பத்தை உண்டாக்கியது.

**மராட்டியர்களின் எழுச்சிக்கான காரணங்கள்:**

**1. நிலவியல் அமைப்பு (Physical features):**

நிலவியல் அமைப்பு மராட்டியர்களின் எழுச்சிக்குக் காரணமாகும். மராட்டிய நாடு வடக்கிலிருந்து தெற்காக சயாத்திரி (Sayadri) மலைத் தொடராலும், கிழக்கிலிருந்து மேற்காக விந்திய சாத்பூரா மலைத் தொடர்களாலும் சூழப்பட்டிருந்தது. மேலும், கணக்கிலடங்கா மலைக்கோட்டைகள் இருந்தன. இம்மலைகளும் கோட்டைகளும் நாட்டைப் பகைவர்களிடமிருந்து காத்துக்கொள்ள இயற்கையான பாதுகாப்பு அரண்களாக விளங்கின.

**2 மக்களின் தன்மை (Nature of the people):**

இந்த நாட்டில் மழை குறைவு என்பதாலும், கற்கள் நிறைந்த வளமற்ற நிலமாக இருந்ததாலும் மக்களின் வாழ்க்கை மிகக் கடினமாக இருந்தது. தங்கள் அன்றாட உணவிற்கே கடுமையாக உழைக்க வேண்டியதிருந்தது. இதன் காரணமாக மராட்டியர்கள் தன்னம்பிக்கை, வீரம், விடாமுயற்சி, மனஉறுதி போன்ற நல்ல தன்னம்பிக்கைகளைக் கொண்டிருந்தார்கள். நேர்மையும், சமுதாய சமத்துவ உணர்ச்சியும் அவர்களிடம் காணப்பட்டது.

**3. மதப்பற்று (Religious faith) :**

மராட்டிய மக்களிடையே துக்காராம், ஏக்நாத், வாமன் பண்டிட் குருராம்தாஸ் போன்ற சமயப் பெரியோர்கள் தோன்றி மக்களிடம் பக்தியையும், சமத்துவத்தையும் போதித்தார்கள். ஜாதி, மதம், தொழிலின் சிறப்பு, சமூகத்திலுள்ள மதிப்பு இவற்றால் பயனில்லை என்று போதித்தார்கள். பல பக்தி இலக்கியங்களைப் படைத்தார்கள். பல பாடல்கள், இலக்கியங்கள் படைத்தார்கள். அவைகளில் 'தசபோதம்' என்ற நூல் குறிப்பிடத்தக்கது. இவை மக்களின் இனப்பற்றையும், ஒற்றுமை உணர்வையும் ஏற்படுத்தியது. மக்களின் வாழ்க்கை, மொழிக் கொள்கை ஆகியவற்றில் ஐக்கியம் வளர்ந்தது.

**4. போர்த்துறை அனுபவம்:**

மராட்டியர்கள் தென்னிந்திய சுல்தானியங்களின் அரசுகளின் பல பதவிகளை வகித்தார்கள். இதனால் அரசியல் மற்றும் படைத்துறை ஆகியவற்றில் அனுபவமிக்கவர்களாக இருந்தனர். சிவாஜியின் தந்தை ஷாஜி பான்ஸ்லே அக்மத்நகர் சுல்தான் படையில் பணியாற்றியவரே! முராரிராவ், மதன் பண்டிதர், நர்சோகலே, யேசு பண்டிதர் போன்ற மராட்டியத் தலைவர்கள், அமைச்சர்கள், திவான்கள் போன்ற பதவிகளை பல சுல்தானியங்களில் வகித்தார்கள். இந்த அனுபவங்கள் அவர்களின் எழுச்சிக்குக் காரணமானது.

**5. அரசியல் விழிப்புணர்வு (Political consciousness):**

அப்போதிருந்த இந்தியாவின் அரசியல் நிலை மராட்டியர்களின் எழுச்சிக்கு மிகவும் உதவியது. தக்காண சுல்தான்கள் தங்களுக்குள் அடிக்கடி போரிட்டுக் கொண்டு வலிமையிழந்து காணப்பட்டார்கள். அவர்கள் மராட்டியர்களின் எழுச்சிக்கு எந்த இடையூறும் செய்ய வலியற்றிருந்தார்கள். அதே நேரம் இந்துக்களுக்கு எதிராக ஔரங்கசீப் பின்பற்றிய அடக்குமுறைக் கொள்கையும் போரும் ஒரு சுதந்திர மராட்டிய நாட்டை அமைக்க வேண்டும் என்ற அரசியல் விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தியது. எனவே பல பிரிவுகளாக இருந்த மராட்டியத் தலைவர்கள், தங்களின் வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டார்கள்.

**6. சிவாஜியின் தலைமை (Leadership of Shivaji):**

மராட்டியர்களின் எழுச்சிக்கு சிவாஜியின் தலைமை முக்கியக் காரணமாகும். சிவாஜிக்கு முன்னர் சுதந்திர தீபத்தை ஏற்றி வைக்க தகுந்தத் தலைவர்கள் தனது தலைமையில் ஒன்றுபடுத்தனார். தக்காண சுல்தான்கள் மற்றும் முகலாயருடன் போரிட்டு ஒரு சுதந்திர நாட்டை அமைக்கக் காரணமானார். இவரது தேசப்பற்றும், திறமையும், தலைமைத் தன்மையும், மராட்டியர்களின் எழுச்சிக்குக் காரணமானது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**சிவாஜியின் வாழ்க்கைக் குறிப்பு:**

மராட்டிய வீரரான சிவாஜி பூனா மாவட்டத்தில் பல கிராமங்களில் தலைவர்களாக விளங்கிய பான்ஸ்லே என்ற வம்சத்தில் ஷாஜி பான்ஸ்லே என்பவரின் மகனாக 1627 ஏப்ரல் 4-ஆம் தேதி ஷிவனேரி (Shivaneri) என்ற கிராமத்தில் பிறந்தார். தாயின் பெயர் ஜீஜாபாய். ஷாஜிபான்ஸ்லே தனது இரண்டாவது மனைவியான துக்காபாய் மீது அதிகப் பற்றுக் கொண்டு, சிவாஜியை தம் தாயுடன் தாதாஜி கொண்ட தேவ் என்ற பிராமணரின் பராமரிப்பில் விட்டுவிட்டு, பீஜப்பூர் சுல்தானிடம் பணியாற்றச் சென்றுவிட்டனர். கணவரால் புறக்கணிக்கப்பட்ட ஜீஜாபாய் அறிவும், பண்பும், நல்லொழுக்கமும் மிக்கவர். தனது மகன் சிவாஜிக்கு வீரத்தையும், பக்தியையும் ஊட்டினார். சிறந்த பண்புள்ளவராக உருவாக்கினார்.

குருராம்தாசும், துக்காராமும் சிவாஜியின் சிறந்த மதகுருக்கள். மராட்டியர்களை ஒன்றுபடுத்தவும், இந்து சமயத்தைப் பாதுகாக்கவும் அவர்கள் போதித்தனர். "தாயும் தாய்நாடும் சொர்க்கத்தை விடச் சிறந்தவை. கடவுள் பெயரில் நம்பிக்கையில்லாமல் வாழ்வதை விட சாவதே சிறந்தது. மதத்தைப் பாதுகாக்காமல் வாழ்வதில் பயனில்லை " என்று கூறினார் ராம்தாஸ். இதனால் சிவாஜியின் நாட்டுப் பற்றும் மதப்பற்றும் வளர்ந்தது. தாதாஜி கொண்ட தேவ் சிவாஜிக்குப் போர்ப் பயிற்சி, குதிரையேற்றம் ஆகிய கலைகளைக் கற்றுக் கொடுத்தார்.

வலிமையான படையை அமைத்தல், கோட்டைகளை எதிரிகளிடமிருந்து காத்தல், கொரில்லாப் போர் போன்றவற்றையும் சிவாஜி அவரிடம் கற்றுக்கொண்டார்.

சிவாஜி தனது இளமைக் காலத்தில் மேற்கு கடற்கரையிலுள்ள மாவல் நாட்டு மலை இன மக்களுடன் நெருங்கிப் பழகினார். மாவாலி மக்கள் முரட்டுத்தனம் வாய்ந்த சிறந்த வீரர்கள், சலியாது உழைப்பவர்கள். அவர்களுடன் மலைப் பகுதிகளிலெல்லாம் சிவாஜி சுற்றித் திரிந்ததால் மராட்டிய நாட்டின் மலைவழிகள், பள்ளத்தாக்குகளை நன்கு அறிந்திருந்தார். எனவேதான் பின்னர் சிறந்த மலையெலி' என்ற பட்டத்துடன் வீரராகத் திகழ்ந்தார்.

**சிவாஜியின் வெற்றிகள்:**

சிவாஜி தனது பன்னிரெண்டாவது வயது முதலே தந்தையின் ஜாஹீரின் நிர்வாக முறைகளைக் கவனித்து வந்ததால் நல்ல நிர்வாக அனுபவம் கிடைத்தது. தனது 19 ஆம் வயதில் போரில் இறங்கினார். அந்நியர்களின் ஆதிக்கத்திலிருந்து மராட்டிய மக்களை விடுதலையாக்கி அவர்களுக்கென்று ஒரு தனி ராஜ்யத்தை ஏற்படுத்தப் போரில் இறங்கினார்.

**1. தோர்னா கோட்டையைக் கைப்பற்றுதல் (Torna):**

பீஜப்பூர் சுல்தானின் சீர்கேடான ஆட்சி முறையில் அப்பகுதியில் உள்ள மராட்டிய மக்கள் கடுந் துன்பமடைந்தனர். 1646-ல் சுல்தான் நோய்வாய்ப்படவே நாட்டின் கலகங்களும் புரட்சியும் ஏற்பட்டன. இச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு பூனாவிற்கு தென் மேற்கிலிருந்த தோர்னா' கோட்டையைத் தனது 19-ஆம் வயதில் கைப்பற்றினார் சிவாஜி. அதன் பலனாக சுமார் இரண்டு இலட்ச ரூபாய் கிடைத்தது.

அதைக் கொண்டு தனது படையைப் பலப்படுத்திக் கொண்டார். அதேயாண்டில் ரெய்க்கார் கோட்டையைத் கைப்பற்றினாலும் அதை சிறிது காலத்தில் இழக்க வேண்டியதாயிற்று.

**ஷாஜிபான்ஸ்லே கைது செய்யப்படல்:** இவ்வாறு சிவாஜியின் அதிகாரம் வளர்வதைக் கண்டு கோபமடைந்த சுல்தான் சிவாஜியின் தந்தை ஷாஜியைக் கைது செய்து சிறையிலடைத்தார். அவரது ஜாஹிர் பறிமுதல் செய்யப்பட்டது. இதனால் சிவாஜி திகைத்தார். சுல்தானுக்கெதிராக சிவாஜி தனது நடவடிக்கைகளைத் தொடரக்கூடாது என்ற நிபந்தனையின் பேரில், ஷாஜி விடுதலை செய்யப்பட்டார். சிவாஜியும் 1649 - '55 வரை தனது செயல்பாடுகளை நிறுத்திவைத்தார். இக் காலத்தில் தனது படைக்கு நல்ல பயிற்சி அளித்தார் சிவாஜி.

**2 ஜாவ்லி (Javali) கோட்டையைக் கைப்பற்றுதல்:**

சர்தார் சுந்தர்ராவ் என்ற மராட்டியத் தலைவர் ஒருவர் பீஜப்பூர் சுல்தானிடமிருந்து 16-ஆம் நூற்றாண்டிலேயே ஒரு ஜாகீரைப் பெற்று மராட்டியப் பகுதியின் வடமேற்கில் ஜாவ்லி கோட்டையை அமைத்திருந்தார். அவர் அடில்ஷா என்ற ஆளுநருடன் சேர்ந்துகொண்டு சிவாஜிக்கு எதிராகப் பல சதித்திட்டங்களை வகுத்தார். இதை அறிந்த சிவாஜி போர்க் கருவிகளை வாடகைக்கு வாங்கி போரிட்டு 1656-ல் ஜாவ்லி கோட்டையைக் கைப்பற்றினார். இதனால் சிவாஜியின் பெயரும் புகழும் மராட்டியர் மத்தியில் உயர்ந்தன. அதிகமானபேர் இவரது படையில் சேர முன்வந்தனர்.

**3. ரெய்கார் கோட்டையைக் கைப்பற்றுதல்:**

ஜாவ்லி கோட்டையைக் கைப்பற்றிய சிவாஜி தொடர்ந்து தன் ராஜ்யத்தைப் பெரிதாக்க நினைத்தார். எனவே ரெய்கார் கோட்டையைத் திரும்பவும் தாக்கி கைப்பற்றினார். அதைத் தொடர்ந்து பூனாவிற்கு அருகிலுள்ள சுபா' கோட்டையைப் பிடித்தார். சுபா, பாரமதி, இந்துபூர் ஆகிய இடங்கள் பூனா மாவட்டத்தின் தென் கிழக்குப் பகுதியில் சிவாஜிக்குப் பாதுகாப்பாக விளங்கின. புரந்தர், ரெய்க்கார், கோண்டு வானா, தோர்னா, கல்யாண் ஆகிய கோட்டைகள் சிவாஜி ராஜ்யத்தில் சிறந்த மலைக்கோட்டைகளாக விளங்கின.

**4. பீஜப்பூர் சுல்தானோடு போர் (1657-'62) :**

இதுவரை முகலாயப் படையெடுப்பிலிருந்து நாட்டைப் பாதுகாத்துக் கொண்டிருந்த பீஜப்பூர் சுல்தான் ஔரங்கசீப் மகுடப் போட்டியில் ஈடுபடுவதற்காக தக்காணத்தை விட்டுச் சென்றதால் பயமில்லாமல் வாழ்ந்தார். எனவே சிவாஜியின் மீது சீற்றம் கொண்டு அவரைத் தண்டிக்க நினைத்தார். தனது தலைமைத் தளபதியான அப்சல்கானை (Afzal Khan) ஒரு வார காலத்தில் சிவாஜியைக் கைது செய்தோ அல்லது பிணமாகவோ பீஜப்பூர் கொண்டு வரும்படி கட்டளையிட்டார். வீராவேசத்துடன் சென்ற அப்சல்கான் மராட்டிய எல்லைக்குள் கால் வைத்தவுடன் மக்களைக் கொன்றும், பயிர்களை அழித்தும் சேதப்படுத்தினார். பல இடங்களில் இந்துக் கோவில்களை அழித்தார். ஆனால் சிவாஜி தனது பிரதாப்கார் கோட்டையை விட்டு வெளியே வரவில்லை.

ஆனால் சிவாஜி தங்கியிருந்த மலைப்பகுதியை அடைய முடியாது என்பதைப் புரிந்து கொண்ட அப்சல்கான், தான் தங்கியிருந்த இடத்திற்கு சிவாஜியை பேச்சுவார்த்தை நடத்துவதாக அழைத்து வஞ்சகமாக கொல்ல நினைத்தார். எனவே கிருஷ்ணாஜி பாஸ்கர் என்ற மராட்டிய பிராமணர் மூலம் சிவாஜிக்குத் தன்னை வந்து சந்திக்கும்படி சொல்லி அனுப்பினார். அப்சல்கான் அதற்குச் சம்மதித்த சிவாஜி முன்னெச்சரிக்கையாக உள்கவசம் அணிந்து சென்றார். சிவாஜியை வரவேற்பது போல பெரிய உருவம் கொண்ட அப்சல்கான் தனது இரு கைகளாலும் அவரைத் தழுவிக் கொண்டு தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் குத்த முயன்றார். உடனே சிவாஜி தான் மறைத்து வைத்திருந்த பாக்நக் (Bagh Nagh) என்ற புலிநகம் போன்ற எஃகு ஆயுதத்தால் அப்சல்கானைத் தனது பிரதாப் போட்டையில் வைத்து கொன்றார். தலைவரை இழந்த பீஜப்பூர் படையும் சின்னாபின்னமாக்கப்பட்டது. பீஜப்பூர் சுல்தானுக்குச் சொந்தமான கொங்கணம் கோல்காப்பூர் மாவட்டங்களைக் கைப்பற்றினார் சிவாஜி. 1661-ல் சிவாஜியுடன் பீஜப்பூர் சுல்தான் சமாதானம் செய்து கொண்டு அதுவரை சிவாஜி வென்ற பகுதிகளின் தலைவராக அவரை அங்கீகரித்தார்.

**5. முகலாயர்களுடன் தொடர்பு:**

பீஜப்பூர் சுல்தானின் நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டிருந்த சிவாஜி அச்சமயம் தக்காணத்தின் ஆளுநராக இருந்த ஔரங்கசீப்பிடம் நட்பு கொண்டிருந்தார். சில சமயங்களில் மராட்டியப் படை ஔரங்கசீப்பிற்கு ஆதரவாக பீஜப்பூர் சுல்தானை எதிர்த்துப் போரிட்டது. ஆனால் மகுடப் போட்டியில் ஔரங்கசீப் தீவிரமாக ஈடுபட்டதைக் கண்ட சிவாஜி, தக்காணத்திலிருந்த சில முகலாயப் பகுதிகளைத் தாக்கிப் பிடித்தார். முகலாயப் பேரரசராக வந்த ஔரங்கசீப் சிவாஜியின் தந்திரத்தையும், அப்சல்கானுக்கு அவர் செய்த தீங்கினையும்

கேள்விப்பட்டு சிவாஜியை அடக்குமாறு தக்காணத்தில் முகலாய ஆளுநராகப் பதவியேற்றிருந்த தனது மாமனான செயிஸ்டகானுக்குக் கட்டளையிட்டார்.

**6. சிவாஜியும் செயிஸ்ட காணும் (Shayistakhan and Shivaji):**

பேரரசின் கட்டளையை ஏற்ற செயிஸ்டகான், வீராவேசத்துடன் சென்று மராட்டியப் பகுதிகளைத் தாக்கினார். பூனாவிற்குச் சென்று சாகன் (Chahan) கோட்டையைக் கைப்பற்றினார். அதோடு நில்லாமல் கல்யாண் மாவட்டத்திலுள்ள மராட்டியரை விரட்டியடித்தார். அச் சமயத்தில் சிவாஜி தனது தகப்பனாரின் உதவியால் பீஜப்பூர் சுல்தானுடன் சமாதானம் செய்து கொண்டு, முகலாயப் படையை எதிர்த்து கடுமையாகப் போர் புரிந்தார். போர் இரண்டு ஆண்டு காலம் நீடித்தது. திடீரென சிவாஜி பூனாவிலிருந்த செயிஸ்டகானின் பாசறையை நாநூறு போர் வீரர்களுடன் சென்று 1663, ஏப்ரல் 14-ஆம் தேதி இரவு நேரத்தில் தாக்கினார். அவரது படுக்கை அறையிலேயே கொல்ல முயற்சித்தார். ஆனால், தனது மூன்று கைவிரல்களை இழந்து தப்பி ஓடிவிட்டார்.

**7. சிவாஜி சூரத்தைக் கைப்பற்றுதல்:**

செயிஸ்டகானைத் தோற்கடித்து பூனாவைக் கைப்பற்றியதால் மராட்டிய வீரர்கள் ஊக்கம் கொண்டனர். சிவாஜியின் தீரச் செயல்கள் யாவராலும் பாராட்டப்பட்டது. இதனால் சிவாஜியின் ஆசையும் அதிகமானது. 1664 ஜனவரியில் திடீரென்று மேற்கு கடற்கரையில் வாணிபத்தில் சிறந்த செல்வச் செழிப்புடன் இருந்த சூரத் நகரைத் தாக்கினார். சிவாஜியின் 4000 படை வீரர்களைக் கண்ட முகலாய ஆளுநர், சூரத்திலிருந்து ஓடிவிட்டார். சூரத்தைத் தாக்கி சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமான கொள்ளைப் பொருட்களுடன் அங்கிருந்து திரும்பினார். இதுவும் சிவாஜியின் மற்றொரு துணிகரச் செயலாகும். 1670 அக்டோபர் மாதம் இரண்டாம் முறையாக சூரத்தைத் தாக்கினார்.

**8. சிவாஜியும், ராஜா ஜெய்சிங்கும்:**

முகலாய அரசின் மதிப்பையும், புகழையும் பாதிக்கக்கூடிய படையெடுப்புகளில் ஈடுபட்ட சிவாஜியின் செயல்களைக் கண்ட ஔரங்கசீப் அவருடைய கொட்டத்தை அடக்கும்படியாக ஆம்பர் நாட்டு அரசன் மிர்சா ராஜா ஜெய்சிங்கையும், திலர்கான் என்ற படைத் தலைவனையும், 1665-ல் தக்காணத்திற்கு அனுப்பி வைத்தார். போர் அனுபவமும் திறமையும் மிகுந்த ஜெய்சிங் மராட்டியத் தளபதிகளும், அவர்களின் குடும்பத்தினரும் தங்கியிருந்த புரந்தர் கோட்டையைத் தாக்கினார். இதில் ஏராளமான சிவாஜியின் வீரர்கள் கொல்லப்பட்டனர். இதன் பிறகு முகலாயப்படை சிவாஜியின் தலைநகரான ரொய்க்கார் கோட்டையையும் தாக்கியது. எனவே சிவாஜி 1665 ஜூன் 22-ஆம் தேதி ஜெய்சிங்குடன் புரந்தர் என்னுமிடத்தில் உடன்படிக்கை செய்துகொண்டார்.

**புரந்தர் உடன்படிக்கையின் ஷரத்துக்கள்:**

a) சிவாஜி தனது முப்பத்தைந்து கோட்டைகளில் இருபத்தி மூன்றை முகலாயப் பேரரசுக்குக் கொடுத்துவிட்டு பன்னிரெண்டு கோட்டைகளை மட்டும் வைத்துக் கொள்ள வேண்டும்.

b) தக்காணத்தில் முகலாயப் படைகளுடன் சோந்து போர் புரிய 5000 குதிரைகள் அடங்கிய படையை சிவாஜி கொடுக்க வேண்டும்.

c) சிவாஜியின் இழப்பீட்டிற்கு ஈடாக பீஜப்பூர் ராஜ்யத்தைச் சேர்ந்த சில மாவட்டங்களில் சௌத், சர்தேஷ்முகி முதலியன வரிகளை வசூலிக்கும் உரிமை கொடுக்கப்பட்டது.

**9. ஆக்ராவில் சிவாஜி:**

புரந்தரில் உடன்படிக்கை செய்துகொண்ட பின்னர், ராஜா ஜெய்சிங்கும் சிவாஜியும் சேர்ந்துகொண்டு பீஜப்பூரைத் தாக்கினர். ஆனால், அப்படையெடுப்பு தோல்வியில் முடிந்தது. இதனால் சிவாஜி பீஜப்பூர் சுல்தானோடு சேர்ந்துவிடுவாரோ என்று சந்தேகித்த ஜெய்சிங், சிவாஜியை முகலாயப் பேரரசின் அரசவைக்கு வருமாறு வேண்டிக்கொண்டார். வேண்டிய மரியாதையும், நல்ல வரவேற்பும் கிடைக்கும் என்றும், உயிருக்கு ஆபத்தில்லை என்றும் ஜெய்சிங் உறுதி கூறினார். அதன்படி தனது மகன் சாம்பாஜியுடன் 1666-மே மாதம் ஆக்ராவுக்குச் சென்றார். அரசவையில் அவருக்குரிய மரியாதை கொடுக்கப்படவில்லை. மூன்றாம் நிலை பிரபுக்களின் வரிசையில் நிற்கும்படி சிவாஜி கேட்டுக்கொள்ளப்பட்டார்.

இதனால் அவமானம் அடைந்த சிவாஜி, கோபம் கொண்டு அரசவையில் வைத்தே ஔரங்கசீப்பைத் தாக்கிப் பேசிவிட்டார். எனவே சிவாஜியும் அவர் மகனும் கைது செய்யப்பட்டு ஆக்ரா சிறையில் அடைக்கப்பட்டார்கள். சுமார் மூன்று மாத காலமாகத் தன்னை விடுதலை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்ட பிறகும் எந்தப் பயனும் ஏற்படவில்லை. சிறிது காலத்தில் சிவாஜியைக் கொல்ல ஔரங்கசீப் திட்டமிட்டிருந்தார். ஆனால், சிவாஜியோ தந்திரமாக பழக்கூடை மூலம் தனது மகனுடன் சிறையிலிருந்து தப்பித்து 1666 செப்டம்பர் 22-ல் தன் நாட்டிற்குத் திரும்பி வந்தார். அவர் தப்பி வந்தது கடவுள் செயல் என்று மக்கள் அவரை வரவேற்றனர்.

**10. முகலாயப் பேரரசுடன் மறுபடியும் போர்:**

ஆக்ராவிலிருந்து தப்பி வந்த சிவாஜியை அடக்க எந்த முயற்சியும் எடுக்க இயலாதபடி ஔரங்கசீப் வடமேற்கு எல்லைப் போர்களில் ஈடுபட்டிருந்தார். சிவாஜியும் 1667 முதல் 1669 வரை தனது முழுக் கவனத்தையும் ஆட்சி முறையில் செலுத்தினார். நாட்டில் சிறந்த ஆட்சி முறையை நிறுவினார். 1667-ல் தக்காண ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்த தன்வந்த்சிங்குடன் நட்புறவு கொண்டிருந்தார். தன்வந்த்சிங் பேரரசர் ஔரங்கசீப்பிடம், சிவாஜியுடன் சமாதானம் செய்து கொள்ளும்படி கூறினார். எனவே சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. அதன்படி சிவாஜிக்கு 'மராட்டிய மன்னர்' என்ற பட்டமும், ஷாம்பாஜிக்கு 5000 மன்சப்தார் பதவியும் அளிக்கப்பட்டது. ஆனால், பேரரசருக்குப் கீழ்ப்படிந்த சிற்றரசராக சிவாஜி இருக்க விரும்பவில்லை.

எனவே 1670-ல் தான் புரந்தர் உடன்படிக்கைப்படி விட்டுக் கொடுத்த கோட்டைகளையெல்லாம் கைப்பற்றிக் கொள்ளப் படையெடுத்தார். 1672-ல் முகலாயர்களை சால்கர் (Salher) என்ற போர்க்களத்தில் தோற்கடித்தார். 1670 - 74 க்குள் முகலாயர்களிடமிருந்து எல்லாக் கோட்டைகளையும் மீட்டார். அதே நேரம் பீஜப்பூருக்குச் சொந்தமான ஹுப்ளி, கர்வர்,

அங்கோலா ஆகிய பகுதிகளைக் கைப்பற்றினார். முகலாயர்களிடமிருந்தும், பீஜப்பூரிடமிருந்தும் தாம் கைப்பற்றிய பகுதிகளில் சௌத் என்னும் வரியை வசூலித்தார்.

**11. சிவாஜி மகுடம் சூட்டிக் கொள்ளல்:**

தனது புகழின் உச்சியிலிருந்த சிவாஜி, 1674-ஆம் ஆண்டு ஜுன் 6-ல் சத்ரபதி' (The Lord of the Umbrella) என்ற பட்டமேற்று தனது தலைநகர் ரெய்காரில் கோலாகலமாக முடி சூட்டிக் கொண்டார். ஒரு தனி இந்து ராஜ்யம் தக்காணத்தில் தோன்றியது. ஔரங்கசீப்பிற்கு பெரும் மனக் குழப்பத்தைக் கொடுத்தது. மராட்டிய மக்களும் மற்ற இந்துக்களும் புதிதாக ஓர் விஜயநகர ராஜ்யம் தோன்றியுள்ளதாக நினைத்து மகிழ்ந்தனர்.

**12. சிவாஜியின் ராஜ்ய பரப்பு:**

முகலாயப் பேரரசின் பலப் பகுதிகளை வென்ற சிவாஜி, 1677-ல் கோல்கொண்டா சுல்தானுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு தெற்கு முகமாகப் படையெடுத்தார். ஓராண்டு காலத்திற்குள், செஞ்சிக் கோட்டை, வேலூர், தஞ்சாவூர், திருவண்ணாமலை, ஆரணி மற்றும் கர்நாடகத்தின் ஒரு சிறு பகுதியையும் கைப்பற்றினார். இவ்வாறு தென்னிந்தியாவில் முஸ்லீம்களின் ஆதிக்கத்திற்கு முடிவு கட்டினார். மொத்தத்தில் இவரது ஆட்சியின் கீழ் சுமார் அறுபது இலட்சரூபாய் வருட வருமானமுள்ள சுமார் நூறு கோட்டைகள் இருந்தன. மேற்கு கடற்கரை ஓரமான பகுதிகளும், மைசூர் ராஜ்யத்தின் பெரும் பகுதியும், துங்கபத்திரை மாவட்டத்திலுள்ள பெல்லாரியும், மராட்டிய ராஜ்யத்திற்குள் அமைந்திருந்தன. வடக்கே கோல்காப்பூர் வரை சிவாஜி ராஜ்யம் பரவியிருந்தது.

இவ்வாறு மாவீரன் சிவாஜி, சமயக் கொள்கையாலும், சமூகக் கோட்பாடுகளினாலும் தூண்டப்பட்டு ஒரு பெரிய இந்து ராஜ்யத்தை அமைத்துப் புகழ்ப் பெற்றார். அவருடைய போர் முறையும், அரசின் தந்திரங்களும், பகைவர்களாலும் பாராட்டப்பட்டது. மலைஎலி' என்று சிவாஜியை அழைத்த ஔரங்கசீப் எலி' கடித்தாலும் மரணம் ஏற்படலாம்' என்றார். சிறந்த போர் வீரராக இருந்ததுடன் மட்டுமல்லாமல், தனது ராஜ்யத்தில் சிறப்பான ஆட்சி முறையை அமைத்து பெரும் புகழ் பெற்றார் சிவாஜி. 1680-ஆம் ஆண்டு தனது 53-ஆம் வயதில் காலமானார் சிவாஜி.

சிவாஜியின் ஆட்சி முறை வரலாற்றில் தோன்றிய நெப்போலியன் போன்ற சிறந்த வீரர்களில் ஒருவராகத் திகழ்பவர் சிவாஜி. போர் வீரராக மட்டுமல்லாமல் திறமையாக ஆட்சி செய்பவராகவும் இருந்தார். பிறப்பிலேயே தலைமைத் தன்மை வாய்ந்தவராகக் காணப்பட்டார். நாட்டின் படைக்கும் அலுவல்களுக்கும் ஆட்களைத் தேர்ந்தெடுப்பதில் அவரது திறமை வெளியாயிற்று. எப்போதும் சிரித்த முகம் படைத்தவர். மக்களின் குணநலன்களை நிதானித்துக் கண்டுபிடிக்கும் திறமையுடையவர். அவருடைய நிர்வாகமும், நாட்டின் ஆட்சி முறையும் இணையற்ற திறனுடன் விளங்கின.

**1. மைய ஆட்சி முறை (அரசர்):**

சிவாஜியின் அரசு, முகலாய அரசைப் போன்றே முடியரசாகும். எல்லா அதிகாரங்களும் சத்ரபதியிடமே குவிந்திருந்தன. ஆட்சி முறைத் தலைவராக விளங்கியவர் அரசே! மத்தய காலத்தில் ஐரோப்பாவில் ஆட்சி புரிந்த எதேட்சதிகாரிகளை போலவே விளங்கினார். ஆனால்,

சிவாஜி மக்களின் நலநன மனதிற்கொண்டு செயலாற்றிய ஒளியுட்டும் வல்லரசராக விளங்கினார். அவர் நினைத்ததெல்லாம் சட்டமாகியது. எல்லா நிர்வாகத் துறைகளையும் தாமே நேரில் கண்காணித்தார். நாடு முழுவதும் செயல்பட வேண்டிய அரசியல் கொள்கைகளை அவரே வகுத்தார்.

**அஸ்டபிரதான்:**

நாட்டின் ஆட்சி முறையை செவ்வனே நடத்துவதற்காக எட்டு அமைச்சர்களைக் கொண்ட அஸ்டபிரதானம் (Ashta Pradhan) என்ற சபை சிவாஜிக்கு உதவியது. இது இப்போது இருக்கும் கேபினட் போன்று அதிகாரமுடையதாக இல்லை. அரசருக்கு அறிவுரை கூறுவதாகவே காணப்பட்டது. எட்டு அமைச்சர்கட்கும் தனித்தனியாக இலாக்காக்கள் கொடுக்கப்பட்டு அவைகளின் செயல்பாடுகள் பற்றி அரசருக்குத் தெரிவிக்கப்பட்டது. அஸ்டபிரதான அமைச்சர்களின் பணிகள் பின்வருமாறு:

**a) முதலமைச்சர் பீஷ்வா (Peshwa):**

இவருக்கு முக்கிய பிரதானி என்று பெயர். இதர அமைச்சர்களின் அலுவல்களை மேற்பார்வையிடுவதாகவும், அரசர் தலைநகரில் இல்லாத காலங்களில் நிர்வாகத்தை நடத்துவதும் இவரது முக்கிய அலுவல்கள். அசரருடைய முத்திரைக்குக் கீழாக, இவரது பெயர் முத்திரையை வைத்தே அரசர் தலைநகரில் இல்லாத காலங்களில் தபால்கள் அனுப்பப்பட்டது. இவை தவிர நாட்டின் பொது நலன்களையும், அவற்றின் முன்னேற்றத்திற்குரிய வழிகளையும் கவனித்துக்கொள்ள வேண்டும். அமாத்தியர் என்ற நிதி மந்திரி இருந்தார். நாட்டின் வரவு செலவு கணக்குகளைச் சரிபார்த்து கையொப்பம் இடவேண்டியது அமர்த்தியரின் பணியாகும்.

B) **மந்திரி (Mantri):**

அரசரின் அன்றாட நடவடிக்கைகளையும், அலுவல்களையும் குறித்து வைத்து அப்புத்தகங்களைப் பாதுகாப்பவர் இவரே. அரச சபை நிகழ்ச்சிகளையும் குறித்துவைத்துக் கொள்ள வேண்டும். அரசர் நடத்தும் விருந்துகளுக்கான ஏற்பாடுகளைச் செய்து குறிப்பிட்ட நபர்களை அழைத்தனுப்ப வேண்டும். ஏதேனும் சதித் திட்டங்கள் நடந்தாலும் கண்டுபிடித்து அரசரைக் காப்பாற்றவேண்டியது மந்திரியின் கடமையாகும்.

**c) கண்காணிப்பாளர்: சச்சீவா (Sachiva)**

இவர் உள்நாட்டு காரியதரிசி என்று அழைக்கப்படுவார். அரசரின் தபால் போக்குவரத்துக்களை இவர் கவனித்து வந்தார். தபால எழுதுவதும், அதில் அரசரின் முத்திரையிடுவதும் இவரது முக்கியப் பணியாகும்.

**d) அயல்நாட்டுச் செயலாளர்: சுமந்த் (Sumant)**

அயல்நாட்டுக் காரியங்களிலும் போர், சமாதான உடன்படிக்கைகள் செய்வதிலும், அரசுக்கு ஆலோசனை கூறுவதும் இவரது பணி. அயல் நாட்டுத் தூதுவர்களை வரவேற்பதும், அவர்களை உபசரிப்பதும், அதிக பலம் வாய்ந்த செயல்களை அறிந்து, அவற்றிற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுப்பதும் இவருடைய வேலை.

**f) தலைமைத் தளபதி: சேனாபதி (Senapathi)**

படைக்கு ஆள் எடுத்தல், படையைப் பலப் பிரிவுகளாக அமைத்தல், படை ஒழுக்கத்தையும் பயிற்சியையும் கண்காணித்தல், யுத்த காலங்களில் படையை போர்முனைக்கு அனுப்புதல் ஆகியவை இவரது பணியாகும்.

**g) பண்டிட்ராவ் தானாதியக்ஷா (Panditrao and Danadhyaksha)**

இவர்கள் சமயத் துறை தலைவர்களாக விளங்கினார்கள். மத சம்பந்தமான விழாக்களுக்கு நாட்குறித்தல், மன்னர் கொடுக்கும் தர்மத்தை பிராமணர்கட்கு பகிர்ந்து கொடுத்தல், மக்களின் சன்மார்க்க வாழ்க்கையைப் பரிசீலித்தல், சமய சன்மார்க்கக் கொள்கைகளை மீறியவர்களுக்குத் தண்டனை கொடுத்தல் ஆகிய அலுவல்களைச் செய்தனர். மத நிறுவனங்கள், படித்த அலுவலர்களின் சொத்துக்கள் ஆகியவற்றைக் கண்காணிப்பது இவர்களது கடமையாகும். மதக் கொள்கை அடிப்படையில் உண்டாகும் வழக்குகளையும் இவர்களே தீர்க்க வேண்டும்.

**h) தலைமை நீதிபதி நியாயதீட்சா (Niyayadhstsa):**

சிவில் கிரிமினல் வழக்குகளையும், சொத்து தகராறுகளையும் விசாதித்துத் தீர்ப்புக் கூறுவது இவரது கடமையாகும். இவர்களைத் தவிர வேறு சில பதவிகளிலும் சில அமைச்சர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு இலாக்காவிற்குப் பொறுப்புள்ளவராக இருந்தார். இந்த அஸ்டபிரதானம் சிவாஜி முடி சூட்டிக் கொண்டபோது திடீரென அமைக்கப்ட்டதல்ல. மராட்டிய அதிகாரம் வளரவளர ஆரம்பம் முதலே படிப்படியாகப் பலப் பதவிகள் ஏற்படுத்தப்பட்டு வளர்ந்து வந்தன. நியாய தீட்சாகவும் பண்டிட்ராவும் தவிர, இதர எல்லா அமைச்சர்கட்கும் படையை நடத்தி போருக்குச் செல்லவேண்டிய பொறுப்பும் இருந்தது.

**2 மாகாண அமைப்பு:**

சிவாஜி தனது ராஜ்யத்தை மூன்று மாகாணமாகப் பிரித்து ஒவ்வொன்றிற்கும் ஒரு அரச பிரதிநிதியையும் நியமித்தார். மாநிலங்களை பர்கானாக்களாகப் பிரித்து ஒவ்வொன்றிற்கும் ஒரு அரச பிரதிநிதியை நியமித்தார். மாநிலங்களைப் பர்கானாக்களாகப் பிரித்து ஒவ்வொன்றையும் ஆட்சியரின் ஆதிக்கத்தின் கீழ்வைத்தார். அவருடைய பொறுப்பில் ஒரு படையும் இருந்தது. ஒவ்வொரு பர்கானாவும் பல டார்பு(Tarb)களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. கிராமம்தான் ஆட்சி முறையின் சிறிய பிரிவு ஆகும்.

**3. உழவுத் தொழில் வளர்ச்சி:**

பெரும்பாலும் மலைப்பாங்கான நாட்டில் உழவர்களை ஊக்குவிப்பதற்காக சிவாஜி பல திட்டங்களைத் தீட்டினார். பயிரிடப்படும் நிலங்கள் முழுவதிலும் பயிரிடுமாறு செய்தார். நிலச்சுவான்தார்கட்கு கால்நடைகள் வாங்கவும், விதைகள் வாங்கவும் அரச கருவூலத்திலிருந்து கடனாகப் பணம் கொடுக்கப்பட்டுப் பின் பல தவணைகளில் அது வசூலிக்கப்பட்டது. இதனால் விவசாயம் விருத்தியடைந்தது.

**4. நிலவரி வசூல் முறை:**

விவசாயிகளிடமிருந்து நேரடியாக அதிகாரிகள் மூலமாக வரி வசூலிக்கும் ரயத்துவாரி முறை பின்பற்றப்பட்டது. நிலங்கள் கவனமாக அளக்கப்பட்ட பின்னரே வரியின் அளவு நிர்ணயிக்கப்பட்டது. உத்தேச விளைச்சலில் முப்பது சதவிகிதம் அரசாங்க வரியாக வசூலிக்கப்பட்டது. இந்த வரி விகிதம் பின்னர் 40 சதவிகிதமாக உயர்ந்தது. வரியைப் பணமாகவோ தானியமாகவோ கொடுக்கலாம்.

**5. இதர வரிகள்:**

மராட்டிய நாடு மலைப்பாங்கான நாடு. எனவே நிலவரியின் மூலம் நாட்டிற்குக் கிடைத்த வருவாய், மொத்த வருமானத்தில் பத்து சதவிகிதம்தான். எனவே சௌத், சர்தேஷ்முகி என்ற இரண்டு வரிகளை சிவாஜி வசூலித்தார். சௌத் என்ற வரி சிவாஜியினால் வெல்லப்பட்டு அவருக்கு அடங்கியிருந்த பகுதிகளின் நில வருமானத்தில் நான்கில் ஒரு பகுதியாக வசூலிக்கப்பட்ட வரியே ஆகும். வெல்லப்பட்ட பகுதிகளிலிருந்து வசூலிக்கப்பட்ட கப்பம் போன்றது இது. Dr. சென் என்பவர், 'இது நெருக்கடி காலத்தில் படைத் தலைவரால் வசூலிக்கப்படும் வரி' என்கிறார். அதாவது ஒரு திருடன் தன்னைத் தாக்காதபடி அவனுக்கு விலை கொடுப்பது போலாகும் இந்த வரி. இந்த வரி அரசு படைத்துறைக்குப் போய் சேர்ந்தது.

சந்தேஷ்முகி என்பது பரம்பரையாக வந்த மராட்டியர்களின் முக்கியத் தலைவர் (சர்தேஷ்முக்) என்ற முறையில் சிவாஜியின் ஆட்சிமுறைக்கு உட்பட்ட பகுதியில் மேலும் பத்து சதவிகித வரி வசூலிக்கப்படும் வரியாகும்'. இந்த வரிகளால் மராட்டியர்கள் தங்கள் ஆட்சிக்கு அப்பாற்பட்ட பகுதிகளிலும் உட்பட்ட பகுதிகளிலும் தங்கள் செல்வாக்கை நிலைப்படுத்தி, நாளடைவில் அப்பாற்பட்ட பகுதிகளை தங்கள் ராஜ்யத்துடன் இணைத்துக் கொள்ள வசதி ஏற்பட்டது.

**6. படை அமைப்பு:**

சிறந்த போர்வீரரான சிவாஜியின் படையமைப்பு போற்றக்கூடிய ஒன்றாகும். படைமுறையில் பல புதிய சீர்திருத்தங்களைப் புகுத்தி ஒரு நிலையான வலிமை மிக்க படையை ஏற்படுத்தினார். தனது படையை கட்டுப்பாட்டுடன் நடத்த சிறந்த ஒழுக்கம் உள்ளனவாகத் திகழச் செய்தார். இந்துக்களும் இஸ்லாமியர்களும் யாதொரு பாகுபாடும் இல்லாமல் சிவாஜியின் நேரடிப் பார்வையிலேயே சேர்த்துக் கொள்ளப்பட்டனர். சம்பளம் ரொக்கப் பணமாகக் கொடுக்கப்பட்டது. வீரதீரச் செயல்கள் புரிந்த படை வீரர்களுக்கு சன்மானம் வழங்கப்பட்டது. சம்பளத்தற்கு பதிலாக போர்வீரர்களுக்கு கொடுக்கப்பட்ட வருவாய் மானியத்திற்கு சரஞ்சமி முறை (Saranjami System) என்று பெயர். கொள்ளைப் பொருட்களில் வீரர்கட்கும் பங்கு கொடுக்கப்பட்டது. பெண்களோ, அடிமைகளோ, நடன மாதுக்களோ படையுடன் செல்லக்கூடாது. ஒரு படைவீரன் இக்கட்டளையை மீறினால் அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. போரில் பசுக்களையும், பெண்டிர்களையும், பிராமணர்களையும் கவர்ந்து வரக்கூடாது. பர்கிகிரி, முல்க்கிரி (Bargigiri, Mulkgiri) போன்ற கொரில்லாப் போர் முறைகள் படையினரால் கையாளப்பட்டன. சிவாஜியின் படையில் கீழ்க்கண்ட ஐந்து பிரிவுகள் இருந்தன.

a) **காலாட்படை**: இதில் அதிகாரிகள் தரவாரியாக நியமிக்கப்பட்டிருந்தார்கள். நாயக் (Nayak) என்பவர் பத்து காலாட்படை வீரர்களின் தலைவர் ஆவார். ஐந்து நாயக்குகளுக்கு ஒரு

ஹவில்தாரும் (Havildar) இரண்டு அல்லது மூன்று ஹவில்தார்களுக்கு ஒரு ஜுமல்தாரும், பத்து ஜுமல்தார்களுக்கு ஒரு ஹசாரி (Hasari)யும் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர். ஏழு ஹசாரிகள் ஒரு சர் இநாபத்' (Sar-i Nahat) என்பவர் தலைமையில் செயல்பட்டனர். மொத்தத்தில் ஒரு இலட்சம் பேர் கொண்ட காலாட்படை இருந்தது.

**b) குதிரைப்படை**: குதிரைப்படையில் 25 குதிரை வீரர்களைக் கொண்ட பகுதியே குறைந்த அளவு ஆகும். அதற்குத் தலைவராக ஒரு ஹவில்தாரும், ஐந்து ஹவில்தாருக்கு மேலாக ஒரு ஜுமல்தாரும், பத்து ஜுமல்தாருக்கு ஒரு ஹசாரியும் இருந்தனர். சுமார் 1,50,000 குதிரைப்படை வீரர்கள் இருந்தனர்.

**c) கடற்படை:** மராட்டிய நாடு கடற்கரைப் பகுதியில் அமைந்திருந்ததால், கப்பற்படையின் முக்கியத்துவத்தை சிவாஜி நன்கு உணர்ந்திருந்தார். கொலாபா (Coloba) என்ற இடத்தில் 200 கப்பல்களைக் கொண்ட ஒரு பெருங் கப்பற்படையை அமைத்தார். இப்படை முதலில் முகலாயக் கடற்படை கப்பல்களை கொள்ளையிட பயன்பட்டது. இந்தக் கப்பற்படை வளர்ந்து நாளடையில் ஐரோப்பியப் படைகளுடன் போர் புரிய பயன்பட்டது.

**d) யானைப்படை, ஒட்டகப்படை:** சிவாஜியின் படையில் 1220 யானைகளைக் கொண்ட ஓர் படையும், 1500 ஒட்டகங்கள் கொண்ட படையும் இருந்தன. ஆனால், இவை சுமை தூக்குவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டன. மலைப் பிரதேசங்களில் யானைப்படை அதிகமாகப் பயன்பட்டது.

e) **பீரங்கிப்படை**: சிவாஜியின் பீரங்கிப் படையும் பலம் வாய்ந்ததாக இருந்தது. அப்படைக்கான ஆயுதங்கள் ஐரோப்பிய நாடுகளிடமிருந்து கிடைத்தன. "சிவாஜி எண்பது பீரங்கிகளையும், பொருத்துப் பூட்டுகளுக்கு வேண்டிய காரியத்தையும், சூரத்திலிருந்த பிரெஞ்சு இயக்குநரிடம் வாங்கினார்" என்று ஓர்ம் (Orme) என்ற ஆசிரியர் கூறுகிறார்.

**7. கோட்டைகளின் முக்கியத்துவம்:**

சிவாஜியின் காலத்தில் மலைக்கோட்டைகள் நாட்டின் பாதுகாப்பில் முக்கிய பங்கு வகித்தன. சிவாஜியின் கோட்டைகள் மிகச் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்பட்ட படைகளால் பாதுகாக்கப்பட்டு வந்தன. சிவாஜி 240 கோட்டைகளை வைத்திருந்தார். அவற்றின் ராய்கார் கோட்டை மிகச் சிறப்பு வாய்ந்தது. ஒவ்வொரு கோட்டையிலும் போதுமான நீர்வசதி, உணவு வசதி, படைப் பொருட்கள் இருந்தன. ஒவ்வொரு கோட்டையும் ஹல்தார், சப்னி, சரினாபாத் என்ற சம மதிப்புள்ள மூன்று அதிகாரிகளின் கண்காணிப்பில் வைக்கப்பட்டன. கோட்டையிலுள்ள படையினரிடம் சதித் திட்டங்கள் ஏற்பட்டுவிடாதபடி ஒவ்வொரு கோட்டைப் படியிலும் பல ஜாதிப் பிரிவினரும் இருக்க சிவாஜி வழி செய்திருந்தார்.

**8. நீதி வழங்குதல்:**

சிவாஜியின் ராஜ்யத்தல் பண்டைக்கால முறையிலேயே பஞ்சாயத்துக்கள் மூலம் நீதி வழங்கப்பட்டது. குற்றவாளிகளை வதைத்து வழக்குகளின் உண்மையை அறிந்தனர். கிரிமினல் வழக்குகள் பட்டேல் (Patel) என்ற அதிகாரியினால் விசாரிக்கப்பட்டது. இவர் தற்போதைய வட்டாட்சியர் அந்தஸ்து உடையவர். தலைமை நீதிபதி மேல்முறையீட்டு வழக்குகளை

விசாரித்து தீர்ப்பு அளித்தார். ஹஜீர் மஜ்ஸில் (Hazir Majjis) என்ற சபைதான் நீதி வழங்குவதில் எல்லா அதிகாரமும் கொண்ட மன்றமாகும்.

**9. சிவாஜியின் சமயக் கொள்கை:**

சிவாஜி புராதனக் கொள்கையைக் கொண்ட ஓர் தீவிர இந்துவாக இருந்த போதிலும் மத சகிப்புத் தன்மையுடையவராகவே விளங்கினார். இஸ்லாமியர்கள் விரும்பியபடி கடவுளை வணங்க அனுமதித்தார். மசூதிகட்கு மானியம் அளித்தார். எவ்விதப் பாகுபாடும் இன்றி படைகளிலும், அரசாங்க உயர் பதவிகளிலும் முஸ்லீம்கள் சோக்கப்பட்டனர். "அந்தக் காலத்தில் உபத்திரவமடைந்த இந்துக்களுக்கு ஓர் நம்பிக்கையூட்டும் நட்சத்திரமாகவும், அவர்கள் நெற்றியிலிட்ட திலகத்தின் பாதுகாவலராகவும், பிராமணருடைய பாதுகாவலராகவும் சிவாஜி விளங்கினார்" என்று J.N.சர்க்கார் என்ற ஆசிரியர் கூறுகிறார்.

சிவாஜி ஒரு சிறந்த வீரராகவும் தளபதியாகவும் திகழ்ந்தார். கொரிலாப் போர் முறையிலும், மலைக்கோட்டைகளைக் கட்டுவதிலும் நல்ல திறமை பெற்றிருந்தார். ஔரங்கசீப்பின் பிற்போக்குக் கொள்கையை எதிர்த்தே மராட்டியர்களின் நாட்டை உருவாக்கினார். மராட்டிய நாட்டை உருவாக்குகின்றபொழுது குறுக்கிட்ட தடைகளையெல்லாம் உடைத்தெறிந்தார். இந்து சமயத்தின் மீது அவர் கொண்டிருந்த பற்று, அவரை சமய வெறியராக மாற்றவில்லை. சிவாஜியின் சொந்த வாழ்க்கை மிகவும் தூய்மையானது. அக்கால அரசர்களிடம் காணப்பட்ட ஒழுக்கக்கோட்டை சிவாஜியிடம் பாக்க முடியாது. கற்றோரை ஆதரிக்கும் பண்பு மிகுதியாக இருந்தது.

சிவாஜி தன் மக்களின் நன்மைக்காக கடினமாக உழைத்தார். சிவாஜி திறமை மிக்க பரந்த மனப்பான்மையுள்ள நல்ல நிர்வாகி. சுக்ராச்சாரியார், கௌடில்யர் போன்றவர்களின் வடமொழி நிர்வாக நூல்களில் காணப்பட்ட கொள்கைகளின்படி அரசாண்டார். ஆனால் போர்களினால் காணப்பட்ட கொள்கைகளின்படி வென்று தமது நாட்டின் எல்லையைப் பெரிதாக்கினாரே தவிர, நிலையான மராட்டிய ராஜ்யத்தை ஏற்படுத்தினார் என்று கூறிவிட முடியாது. இவருடைய காலத்தில் போரினால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர். தனது 53-ஆவது வயதில் வியாதிப்பட்டு, 1680 ஏப்ரல் 4-ஆம் தேதி தனது பிறந்த நாள் அன்றே இறந்தார்.

## 4. Rise of the Sikhs – Guru Nanak – Khalsa

முகலாய சாம்ராஜ்யம் உச்ச நிலையை பெற்றிருந்த பொழுது ஜஹாங்கீர் மற்றும் ஔரங்கசீப்பின் மதக் கொள்கைகளும் தக்காண கொள்கைகளும் சீக்கிய எழுச்சியும் மாரத்திய எழுச்சிகளும் வித்திட்டன. இராஜா இரஞ்சித்சிங் சிக்கியர்களிடையே ஒருங்கிணைப்பையும் நிர்வாகக் கட்டுக்கோப்பையும் ஏற்படுத்தினார். சத்திரபதி சிவாஜி மாரத்திய தேசிய உணர்வு ஏற்படவும் இஸ்லாமியர்களின் செல்வாக்கு தென்னிந்தியாவில் பரவுவதை தடுக்கவும் காரணமாக இருந்தார். மாரட்டிய பேரரசின் வீழ்ச்சி பேஷ்வாக்களால் தற்காலிகமாக தடுக்கப்படல் புத்துயிர் பெற்றது. பதினேழாம் நூற்றாண்டில் மேற்கத்திய நாடுகளால் துவங்கப்பட்ட இந்தியாவுடனான வாணிப உறவு, வாணிப முற்றுமைக்காகவும், அரசியல் ஆதிக்க நிலைக்காகவும் அவர்களுடைய பகைமை வளர்ந்து போர்கள் ஏற்பட

வழிவகுத்தன. இப்போர்கள் குறிப்பாக கர்நாடகப் போர்கள், பிளாசி மற்றும் பக்ஷார் போர்கள் இந்தியாவில் ஆங்கிலேய ஆதிக்கம் ஏற்பட வழிவகுத்தன.

**சீக்கியரின் எழுச்சி இராஜா இரஞ்சித் சிங் (1780-1839)**

மராத்தியர் எழுச்சியைப் போன்று சீக்கியர் எழுச்சியும் வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும். முகலாய மாமன்னர் ஜஹாங்கீரின் கொடுமையால், சமய கலாச்சார நோக்கங்களில் ஈடுபட்டிருந்த சீக்கியர் போர்க்கோலம் பூண்ட சமயவாதிகளாயினர் என்று கண்டோம். அது முதல் அவர்கள் முகலாயர்களின் பரம விரோதிகளாயினர். தொடர்ந்து, முகலாயருடன் போரிட்டும் வந்தனர். அவர்களின் பத்தாவது குரு கோவிந், 1708ல் காலமானார். அவருக்குப்பின், தனிக் குருவின் கீழ் இயங்கி வந்த சீக்கியர், கூட்டாட்சியின் கீழ் இயங்க ஆரம்பித்தனர். இக்கூட்டாட்சி, மிஸில்ஸ் அல்லது சர்தார் என்றழைக்கப்பட்ட தலைவர்களால் செயல்படுத்தப்பட்டு வந்தது. இவ்விதத் தலைவர்கள் பன்னிரண்டு பேர் இருந்தனர். அவர்களுள் ஒருவர் மகன்சிங் என்பவர். அவர் 1785 முதல் 1792 வரை பதவியிலிருந்தார். அவருடைய மகனே இரஞ்சித் சிங் என்பவராவார்.

இரஞ்சித் சிங் 1780ஆம் ஆண்டில் பிறந்தார். மகன்சிங் 1792ல் காலமானார். அப்போது, இரஞ்சித் சிங்கிற்குப் பன்னிரண்டு வயது. அதனால், இரஞ்சித் சிங் 12ஆம் வயதிலேயே சீக்கியத் தலைவர்களுள் ஒருவரானார். ஆற்றலும், போர்த்திறனும் இளமையிலிருந்தே அவரிடம் குடிகொண்டிருந்தன.

**இராஜாப் பட்டம் பெறல்**

ஆஃப்கானிஸ்தான் அரசர் ஜாமான் ஷா 1799ஆம் அண்டு பஞ்சாப்பின் மீது படையெடுத்தார். அப்படையெடுப்பின்போது இரஞ்சித் சிங், ஜாமன் ஷாவிற்கு உதவினார். அதனால் அவர் இராஜா என்ற பட்டத்தை இரஞ்சித் சிங்கிற்கு வழங்கியதுடன், தாம் ஆஃப்கானிஸ்தானத்திற்குத் திரும்புகையில், அவரை லாகூரின் அரசராகத் தம் ஆதிக்கத்தின்கீழ் ஆளும்படி அமர்த்திவிட்டுச் சென்றார். பெயரளவில் பஞ்சாப் ஆஃப்கானிஸ்தானத்தின் கீழ் இருந்து வந்தது. உண்மையில் இரஞ்சித் சிங் பஞ்சாப்பின் சுதந்திர அரசராக ஆண்டு வந்தார்.

**அமீர்தசரசைக் கைப்பற்றுதல்**

1801ல் இரஞ்சித் சிங், அமிர்தசரஸைக் கைப்பற்றினார். அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த லாகூர் ஏற்கனவே இரஞ்சித் சிங்கின் கீழ் இருந்தது. அமிர்தசரஸ், சீக்கியரின் புண்ணியத்தலம். இவ்விரண்டும் இரஞ்சித் சிங்கின் ஆட்சியின் கீழ் இயங்கின. இவ்வாறு சீக்கிய அரசியலின் மையமாகக் கருதிய லாகூருக்கும், சீக்கிய சமயத்தின் மையமாக விளங்கிய அமிர்தசரசுக்கும் இரஞ்சித் சிங் தலைவரானது சீக்கிய வரலாற்றில் திருப்புமுனை என்றே கருத வேண்டும்.

இரஞ்சித் சிங்கின் புகழுக்கும் இஃது ஏணி போலாயிற்று. ஹோல் காருடன் இணங்க மறுத்தல் ஆங்கிலேயரைப் பகைத்துக் கொள்ளல், தம் அரசியல் வாழ்க்கைக்குத் தற்கொலை செய்து கொள்வதற்கு ஒப்பாகும் என்பதை, அரசியல் தந்திரம் தெரிந்த இரஞ்சித் சிங் நன்கு அறிந்து கொண்டார். அதனாலேயே 1805ல் ஹோல்காரி ஆங்கிலேயருக்கு எதிராக இரஞ்சித்

சிங்கை உதவும்படி கோரியதை ஏற்க மறுத்து விட்டார். அதனுடன் ஆங்கிலேயரின் ஆப்த நண்பராகவும் பழகி, அவர்களின் அன்பையும் ஆதரவையும் பெறுவதில் கண்ணும் கருத்துமாயிருந்தார். சட்லெஜ் பகுதியைக் கைப்பற்றல்

ஆங்கிலேயரின் படை முறையில், தம்முடைய படையையும் அமைத்துத் திறமை மிக்கதாய்ச் செய்தார். மற்றச் சீக்கியத் தலைவர்களையும் ஒருவர் பின் ஒருவராகத் தம் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வந்தார். அதனுடன் சட்லெஜ் பகுதியையும் தம் ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தார்.

**அமிர்தசரஸ் உடன்படிக்கை**

இரஞ்சித் சிங்கின் போர்த்திறனையும், நுண்ணறிவையும் கண்ட மிண்டோ பிரபு ஃபிரெஞ்சுக்காரருக்கு எதிராக இரஞ்சித் சிங்குடன் நட்புறவு கொள்ள முடிவு செய்தார். மிண்டோ பிரபுவின் அந்த எண்ணத்திற்கு இரஞ்சித் சிங்கும் தக்க ஆதரவு காட்டியதால், மெட்காஃப் தலைமையில் ஒரு தூதர் குழுவை மிண்டோ அமிர்தசரசுக்கு அனுப்பி வைத்தார். அக்குழு இரஞ்சித் சிங்குடன் அமிர்தசரஸ் உடன்படிக்கையை 1809 ஆம் ஆண்டில் செய்து கொண்டது. இவ்வுடன்படிக்கையினால், இரஞ்சித் சிங்கின் ஆட்சியின் எல்லை, சட்லெஜ் நதிக்குத் தெற்கே விரிவுபடுத்தக் கூடாதெனக் கட்டுப்படுத்தப்பட்டது. இதனால், ஆங்கிலேயரின் அரசு யமுனையிலிருந்து, சட்லெஜ் வரையில் பரவியது. சட்லெஜ் நதிக்குத் தெற்கே, தம் ஆட்சியைப் பரப்ப முயல்வதை விட்டு இரஞ்சித் சிங் தம் கவனத்தை அதன் மேற்கிலும் வடக்கிலும் செலுத்தி, 1809ல் கூர்க்கர்களையும், 1813ல் ஆஃப்கானியர்களையும் தோற்கடிக்க முடிந்தது. ஆப்கானிஸ்தானத்திலிருந்து துரத்தப்பட்ட ஷா ஷூஜாவிற்கு, 1813ல் இவர் புகலிடம் தந்தார். இதற்காக உலகப் புகழ்பெற்ற கோஹினூர் வைரத்தை ஷா ஷூஜா இரஞ்சித் சிங்கிற்குக் கொடுத்தார். 1818ல் மூல்தானையும், 1819ல் காஷ்மீரையும், 1823ல் பெஷாவரையும் இரஞ்சித் சிங் கைப்பற்றினார்.

வில்லியம் பெண்டிங்க் பிரபு, இந்தியாமீது ரஷ்யர் படையெடுக்கக்கூடும் என்ற அச்சத்தினால் இரஞ்சித் சிங்குடன், சிந்து நதி நாவாய் உடன்படிக்கை என்ற நட்புரிமை உடன்படிக்கை ஒன்றை 1831ல் செய்து கொண்டார். இஃது ஏற்கனவே செய்து கொண்ட அமிர்தசரஸ் உடன்படிக்கையை மீண்டும் புதுப்பிக்கும் வகையிலேயே செய்து கொண்டதாகும்.

**அரசியல் சீர்திருத்தங்கள்**

அக்பர், சிவாஜி, ஐதர் ஆகியோர்களைப் போலவே இரஞ்சித் சிங்கும் ஆர்ந்த பொது அறிவும், அரசியல் நுட்பமும் பெற்றிருந்தார். ஆங்கிலேயரின் திறமையை நன்கறிந்த அவர், அவர்களுடன் நண்பராகப் பழகினார். அதனால், நாட்டைச் செப்பணிடவும் ஆட்சியை ஒழுங்குபடுத்தவும் முடிந்தது. இம்முறையினால் அவர் ஐதருக்கும், திப்புவிற்கும் மாறுபட்டிருந்தார். பஞ்சாப்பின் சிங்கம் எனப் புகழப்பட்டார். கொடிய வைசூரியால் தமது இடக்கண் பார்வையை இழந்த அவர் இனிமையான நடத்தை, பேச்சு ஆகியவைகளைப் பெற்றிருந்தார். அவர் சிறந்த விளையாட்டு வீரர். ஆனால், மிகுந்த குடிப்பிரியர். சுயநலக்காரர். என்றாலும் மக்களின் நலனைக் காப்பதில் அக்கறை காட்டினார். அவர் மிகுந்த தைரியசாலி, எந்த நிலையில் மனம் தளராதவர்.

நில வரியை உழவர்களே நேரடியாகச் செலுத்த அவர் வழி செய்தார். ஆனால், அவர் கடைசிக் காலத்தில் வரி வசூலிக்கும் கிழார்களை அமர்த்தியதாகத் தெரிகிறது. பொருள் சம்மந்தமான வழக்குகளைப் பஞ்சாயத்தார் மூலம் விசாரணை செய்து தீர்ப்பு வழங்க வழி செய்தார். குற்றவியல் விசாரணை அதிகாரம், அரசு ஊழியர்களிடம் இருந்தது. பொதுவாக அவருடைய நிருவாகம், நியாயமாகவும், ஒழுங்காகவும் நடைபெற்றது. மத வேறுபாடின்றி முகமதியர், ஐரோப்பியர், இந்து யாவரையும் அவரவர் தகுதிப்படி ஊழியத்தில் அமர்த்திய பெருமை அவரையே சாரும். உயர்ந்த முறையில் படையினை அமைத்தார். கட்டுப்பாடும் நாட்டுப்பற்றும் பெற்றிருந்த அப்படையினை ஆங்கிலேயராலும் எளிதில் தோற்கடிக்க முடியவில்லை. குதிரைப் படையுடன், காலாட்படை, பீரங்கிப்படைப் பிரிவுகளையும் உண்டாக்கினார். படைவீரர்களின் நலனை மிக்க அக்கறையுடன் கவனித்து, அவர்கள் அன்பையும், ஆதரவையும் பெற்றார். அதனுடன் ஒழுங்கிற்கும் கட்டுப்பாட்டிற்கும் முதலிடம் தந்தார். அவர் வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ள சர் லெப்பல் கிரிஃபின் அவரை மாவீரர், மக்களை ஆளும் அரசர், வரலாறு புகழக் கூடிய ஒரு சில அரசர்களிடையில் வைத்துப் போற்றத்தக்கவர் என்றெல்லாம் புகழ்கின்றார்.

அவர் ஆட்சி ஒரு சிறந்த அரசர் கீழ்தான் இயங்கி வந்தது. இரஞ்சித் சிங்கின் ஆட்சிமுறை மட்டுமன்று. ஏறக்குறைய எல்லா இந்திய அரசுகளின் ஆட்சி முறையும் ஓர் அரசரின் தனித் திறமையை ஒட்டியே செயல்படும் நிலையிலிருந்தன. இதனால், அரசர் ஆட்சித் திறன் குன்றியபோதோ, ஆட்சியில் ஊக்கமின்மை ஏற்பட்டபோதோ, அவ்வரசு சரிந்து வீழ்ச்சியடையலாயிற்று. இராஜா இரஞ்சித் சிங்க 1839ஆம் ஆண்டில் தமது 59 ஆம் வயதில் காலமானார்.

அவருக்குப்பின் இரஞ்சித் சிங்கின் மூத்த மகன் கரக் சிங் அரசரானார். இரஞ்சித் சிங்கின் மற்றொரு மகனான ஷேர் சிங்கால் கரக் சிங் கொல்லப்பட்டார். பிறகு ஷேர் சிங் அரசரானார். அவருக்கு எதிராகப் புரட்சி செய்து அதிகாரம் அனைத்தையும் கல்சா என்ற படையினர் கைப்பற்றினர். ஷேர் சிங்கும் கொலை செய்யப்பட்டார். அவர் கொலைக்குப் பின் துலிப் சிங் என்ற ஐந்து வயது பையனைக் கல்சாப் படை அரியணையில் அமர்த்தியது. அவருடைய பாதுகாப்பாளராக அவருடைய அன்னை இராணி ஜிண்டான் அமர்த்தப்பட்டார். கீழ்த்தரமான இச்சைகளையும் மன நிலையும் படைத்தவர். அவர் ஆதிக்கத்தின் கீழ்ச் சீக்கிய அரசு மேலும் சீர் குலையலாயிற்று. இவ்வாறு இரஞ்சித் சிங்கின் மறைவுக்குப் பின், சீக்கிய அரசு சிக்கலில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது.